# நீங்கள் மந்திரியாக வேண்டுமா?

படைப்பு : கதீப் முஹம்மத் அன்சர் - மொழிபெயர்ப்பு : நயீம் சையத்

ஒரு வியாபார நிமித்தமோ அல்லது வேலையில் அமர்ந்துவிட்ட காரணத்தினாலோ, தன் வீட்டை விட்டு குறைந்த பட்சம் 100 கி.மீ தூரத்தில் நீங்கள் வேறு எங்கேயாவது தங்க வேண்டிய சூழ் நிலையில், விடுதி மேலாளர் அல்லது அந்த இருப்பிட சொந்தக்காரர் உங்களுடைய பூர்வீகத்தை விசாரித்து, அடையாள ஆவணங்களை காட்டச்சொல்வார். நீங்கள் B.Ed தேறியிருந்தாலும் 40 மாணவர்களை கொண்ட ஒரு வகுப்பிற்கு பாடம் கற்பிக்கும் தகுதி உங்களுக்கு உண்டென நிரூபிக்க நடத்தப்படும் தகுதித்தேர்வில் தேறியாக வேண்டும். நீங்கள் ஒரு வழக்கறிஞ்சராக தொழில் புரிய வேண்டியதாயின், உங்கள் இளங்கலை பட்டமோ, அறிவியல் பட்டமோ போதாது. அத்துடன் சட்ட வல்லுனர் பட்டமும் பெற்றிருக்கவேண்டும். கட்டிட கலை சம்பந்தப்பட்ட BE பட்டமின்றி ஒரு பாழடைந்த கட்டிடத்தை தரை மட்டமாக்கும் ஒப்பந்த வேலையும் உங்களுக்கு கிட்டாது. உங்களுக்கு டாக்டராகும் ஒரு இலட்சியம் இருக்குமேயானல், ஆர்வத்துடன் மருத்துவத்தையும் அறுவை சிகிச்சை முறையையும் படிப்பது கட்டாயத்தேவை. அலுவலக எடுபிடி வேலை அல்லது குமாஸ்தா வேலை விதியாக்கப்பட்டோர் குறைந்த பட்சம் 10+2 படித்திருக்கவேண்டும்,

எந்த ஒரு அறிவியல் கலையின் கிளையிலும் நீங்கள் தேர்ச்சி பெறவேண்டுமானால், அக்கலையின் கருத்தியல் மற்றும் அடிப்படை அறிந்திருப்பது அவசியமாகும்.. ஆகவே ஒரு நீதிவான் அல்லது நீதிபதியின் காலியிடத்தை நிரப்ப ஒரு தொழிலதிபரோ, ஒரு பேராசிரியரோ அல்லது ஒரு விரிவுரையாளரோ பரிந்துரைக்கப்படுவதுமில்லை, தேர்ந்தெடுத்து அவ்வேலைகளுக்கு அமர்த்தப்படுவதுமில்லை.

இப்படி எல்லாம் நியதிகள் இருந்த போதிலும், அரசியல் என்ற ஒரே மேடையில் தான் அத்தனை, தகுதிகளும், படிப்பினைகளும், பட்டங்களும் அங்கீகரிக்கப்படாமல் அவசியமற்றதாக்கப்பட்டிருக்கின்றன.

தண்டவாளத்தின் அடியில் விரிக்கப்படும் ஜல்லிக்கற்களின் அவசியம் அறியாதவராக இருந்தாலும் சரி, நீங்கள் இரயில் மந்திரியாக நியமிக்கப்படுவீர்கள். போர் களத்தில் பீரங்கி ஏந்தி பாய்ந்து செல்லும் ஊர்திக்கு "டேங்க்" என பெயரிடப்பட்ட காரணம் அறியாதவராக இருந்தாலும் சரி, நீங்கள் நாட்டின் பாதுகாப்பு அமைச்சராக்கப்படுவீர்கள்.

நீங்கள் உங்கள் பொன்னான வாக்கை அளித்து, பஞ்சாயத்து குழுக்கோ, ஊரின் நகராட்சிக்கோ, பட்டணத்தின் மாநகராட்சிக்கோ, சட்ட சபைக்கோ அல்லது நாட்டையாளும் பாராளுமன்றத்திற்கோ தேர்ந்தெடுத்து அனுப்பிய தகுதியற்ற அரசியல் வாதிகளுக்கு மட்டும் உங்களிடமிருந்து யாதொரு வேலைக்கும் நீங்கள் படித்து தேறிய சான்றிதழ்கள், அல்லது நீங்கள் அடைந்துள்ள தகுதிகளை நிரூபிக்கும் ஆவணங்களை கேட்கும் உரிமையுண்டு!

அரசாங்க அதிகாரிகளும், இந்த அரசியல்வாதிகளின் உதவிக்கு அமர்த்தப்பட்ட மற்ற பணியாட்களும், நீங்கள் செலுத்தி வரும் வரிப்பணத்திலிருந்து தான் சம்பளம் பெறுகின்றனர்.

ஒரு அரசியல்வாதியிடமிருந்து அவர் பெற்ற பட்டத்தை, அவருடைய கல்வித்தகுதியின் அத்தாட்சியை கேட்கும் உரிமை உங்களுக்குள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா? உங்கள் பொன்னான வாக்கை தனக்கு அளிக்குமாறு இல்லம் தேடி உங்கள் வாசலுக்கு வரும் அரசியல்வாதியிடம் அவருடைய தகுதி ஜாதகத்தை உங்களுக்கு விளக்கக்கூறுவதில்லை. அவர் பெற்ற பட்டத்தையாவது கேட்டதுண்டா? அதுவுமில்லை. சரி, அவர் அரசியல் களத்திற்கு வந்ததின் காரணமென்ன, அவர் தம் உற்றாருக்கு செய்த நல்ல காரியங்களென்ன என்பதையாவது கேட்டிருப்பீர்களா? அதுவும் இல்லை. சரி, அவர் இது வரை எத்தனை பேருக்கு எந்த வகையில் உதவி புரிந்துள்ளார் என்றோ, பாவபட்டோருக்காக அவர் செய்த சேவை என்ன என்றோ, நீங்கள் எத்தனை மணி நேரம் தினந்தோறும் எங்களுக்காக உழைப்பீர்கள், உங்களுக்கு வாக்களிக்காதவருக்கும் நீங்கள் சேவை செய்ய தயாரா, என கேட்டதுண்டா?

மேலும், உங்கள் கட்சி ஆட்சி பீடத்தை பிடிக்க தவறிவிட்டால், ஆளுங்கட்சியுடன் நீவீர் ஒத்துழைப்பீரா? அவர்களுடைய தவறுகளை சுட்டிக்காட்டி, பிழையான கொள்கைகளை திருத்தும்படி அறிவுறை வழங்குவீரா? ஏழை, பணம் படைத்தவர் என பாராமல், அனைவருக்கும் சமமாக உழைத்து, வேண்டிய நியாயமான கோரிக்கைகளை பூர்த்தி செய்வீரா, அல்லது ஆளுங்கட்சி தகுதியற்றதாக நிரூபித்து ஆட்சியை கவிழ்க காலத்தை கழிப்பீரா?

இன்று வரை நாம் நமது உரிமைகளை நிலை நாட்டவில்லை. அதனால், அரசியல்களம் பொன்னையும் புகழையும் பெறும் ஆர்வமுள்ளோரால் அடைந்து கிடக்கிறது. பொது மக்களின் பிரச்சினைகள் குறைவதற்கு பதில் தினந்தோறும் அவை கூடிக்கொண்டே போகின்றன. ஆகவே, அப்படிப்பட்ட சுய நலவாதிகளிடமிருந்து விடுபட்டு, சமூக, சமுதாய மேம்பாட்டிற்கும், நமது நாட்டின் நலத்தின் பொருட்டு நாம் உடனே செய்யவேண்டியவை யாதெனில்:

நாம் நீதி மன்றத்தை அணுகி பொது நல வழக்கு ஒன்றை தாக்கல் செய்யவேண்டும். அதில், சரியாக பஞ்சாயத்து போர்டு முதல் பாராளுமன்றம் வரை, அதிகாரத்தை வேண்டுவோருடைய கட்டாய தகுதிகள் நியமிக்கப்பட்டு அவை சட்டமாக்கப்படவேண்டும். அரசாங்கத்தின் அனைத்து வசதிகளும், சலுகைகளும் தேர்ந்தெடுக்கப்படும் ஏழை உறுப்பினர்களுக்காக மட்டும் வழங்கப்பட வழி வகை செய்து, அவைகளை அனுமதிக்கும் அதிகாரத்தை நீதி மன்றம் தன்னிடம் தக்க வைத்துக்கொள்ளவேண்டும்.

அவ்வாறு செய்வதினால், அநேக பிரச்சினைகள் உடனே மறைந்து, நாடு முன்னேற்றத்தின் பாதையில் வேகமாக செல்லும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த செய்தியை வாக்களிக்கும் மக்கள் அறியச்செய்து விழிப்பை உண்டாக்கவேண்டியது அவசியம்.